# *மாற்று அரசியல் பண்பாடு நோக்கி...*

## மாநில அளவிலான கள ஆய்வு முடிவுகள்

### *ஆய்வுப் பின்னணி*

தமிழக மக்களின் பண்பாட்டு-அரசியல் தளங்களில் நிகழ்ந்துவரும் ஒருங்கிணைந்த மாற்றங்களின் போக்குகளையும், அப் போக்குகளின் பின்னால் உறைந்துள்ள மாற்று அரசியல் பண்பாட்டுக்கான ஏக்கங்களையும் பதிவுசெய்யும் தொடர் முயற்சியாக, பேரா. டாக்டர் ச. ராஜநாயகம் அவர்களின் வழிநடத்துதலில், ஆண்டிற்கு இரு முறை மாநில அளவிலான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### *ஆய்வு அணுகுமுறை*

திமுக ஆட்சிப் பொறுப்பேற்று ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகியுள்ள நிலையில், நடுவண் அரசியல் களத்தின் சூழலையும் கவனத்தில் கொண்டு, நவம்பர்-டிசம்பர் மாதங்களில் இரு கட்டங்களாக (நவம்பர் 7-17, டிசம்பர் 6-14) ஆய்வு நடைபெற்றது. முப்பதுக்கும் மேற்பட்ட பயிற்சிபெற்ற கருத்துச் சேகரிப்பாளர்களால் தமிழகத்தின் 39 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் மொத்தம் 3281 பேரிடம் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

தமிழ்ப் பண்பாட்டு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) கூறுகளை உள்ளடக்கி, பேரா. டாக்டர் ச. ராஜநாயகம் உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறை* (social-psychological approach) இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டுள்ளது.

ஊடக அரசியல், இளைஞர் அரசியல், மாநில அரசியல், தேசிய அரசியல் ஆகிய நான்கு பெருந் தலைப்புகளின் கீழ் ஆய்வு முடிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன.

### *பங்கேற்றோர் பின்னணி*

களஆய்வில் பங்கேற்றோரில் 74.8 ஆண்கள். *வயதுரீதியாக,* 25 வயது வரை - 16.5, வயது 26 முதல் 35 வரை - 24.6, வயது 36 முதல் 45 வரை - 29.7, வயது 46 முதல் 60 வரை - 24.2 (மீதி - வயது 60-க்கு மேல்). பங்கேற்றோரில் 27.8 திருமணமாகாதவர்கள்.

*கல்வியைப்* பொருத்த மட்டில், பெரும்பாலோர் (54.4) வகுப்பு 6 முதல் 12 வரை படித்துள்ளவர்கள் (படிக்காதவர்கள் முதல் 5-ஆம் வகுப்பு வரை படித்துள்ளவர்கள் - 24.0, கலைசார் கல்லூரிக் கல்வி - 12.0, தொழில்சார் கல்லூரிக் கல்வி - 4.8, மீதி - பிறவகைப் படிப்புக்கள்).

*சாதிரீதியாக,* தாழ்த்தப்பட்டோர் - 18.6, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 21.4, பிற்படுத்தப் பட்டோர் - 43.3 (மீதி - பிற இனத்தினர் / சாதி தெரிவிக்காதோர்). *மதரீதியாக,* இந்து மதத்தினர் - 83.7, இஸ்லாமியர் - 6.0, கிறிஸ்தவர் - 4.8 (மீதி - பிற மதத்தினர் / தெரிவிக்காதோர்).

*தொழில்ரீதியாக,* கூலி/விவசாயிகள் - 34.1, சொந்தத் தொழில் செய்வோர் - 36.0, தனியார் நிறுவனத்தில் வேலை செய்வோர் - 17.3, அரசு ஊழியர் - 5.1, மீதி - வேலையற்றோர் / வேறு வேலைகள்.

## ஊடக அரசியல்

### *01. நடிகர்களின் அரசியல் நுழைவு:*

நேரடி அரசியலில் நடிகர்கள் நுழைவதை ஆதரிப்பவர்களை விட எதிர்ப்போர் அதிகமாக இருந்தாலும், மிக வலுவாகவே ஆதரவும் வெளிப்படுகிறது.

| | ஆதரவு | எதிர்ப்பு |
|---|---|---|
| ஒரு கட்சிக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்வது | 41.1 | 50.2 |
| ஒரு கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடுவது | 37.5 | 47.8 |
| தானே சொந்தமாகக் கட்சி தொடங்குவது | 34.8 | 45.3 |

*(மீதி - கருத்துத் தெரிவிக்காதோர்)*

### *02. நடிகர்கள் தலைமையில் அரசியல் கட்சிகள்:*

சமீப காலங்களில் நடிகர்கள் தொடங்கியுள்ள / தலைமையேற்றுள்ள கட்சிகள் தமிழக அரசியலில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்ற கேள்விக்கு, தேமுதிக தவிர்த்த பிற கட்சிகளால் பெரிதாக எந்தத் தாக்கமும் இருக்காது என்பதே பெரும்பான்மைக் கருத்தாகப் பதிவாகியுள்ளது.

| கட்சி | மிகப்பெரிய தாக்கம் | ஓரிரு இடங்களில் மட்டும் | தாக்கமேதும் இருக்காது |
|---|---|---|---|
| லதிமுக (விஜய டி. ராஜேந்தர்) | 1.3 | 4.9 | 93.8 |
| தேமுதிக (விஜயகாந்த்) | 47.9 | 22.6 | 29.5 |
| பார்வர்டு பிளாக் (கார்த்திக்) | 4.1 | 7.0 | 88.9 |
| அஇசமக (சரத்குமார்) | 4.3 | 8.3 | 87.4 |

### *03. ரஜினிக்கு ஏற்ற துறை:*

ரஜினிகாந்த் இனி எந்தத் துறையில் செல்வது தங்களுக்கு விருப்பம் என மக்கள் தெரிவித்துள்ள கருத்துக்களில், நேரடி அரசியலுக்குக் கடைசி இடமே கிடைத்துள்ளது.

| | |
|---|---|
| முழுநேர சினிமா | 45.2 |
| முழுநேர ஆன்மீகம் | 23.8 |
| முழுநேரச் சமூக சேவை | 14.2 |
| நேரடி அரசியல் | 11.3 |

*திரையுலகிலேயே ரஜினி தொடரவேண்டும் என்போரில்* பெரும்பாலோர் அவர் வயதுக்கேற்ற பாத்திரங்களில் நடிக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

| | |
|---|---|
| வயதுக்கேற்ற பாத்திரத்தில் நடிப்பு | 51.4 |
| இதுவரை நடித்துள்ளது போலவே | 36.3 |
| நடிப்புக்குப் பதில் இயக்கம் | 8.9 |
| நடிப்புக் கற்றுத் தருதல் | 2.2 |

### *04. தமிழ் தலைப்புக்கு வரிச் சலுகை:*

கடந்த ஆண்டு (2006) டிசம்பரில் வெளியிட்ட கணிப்பில், திரைப்படங்களுக்குத் தமிழில் தலைப்பு வைத்தால் வரிச்சலுகை வழங்கும் திமுக அரசின் திட்டத்தை மக்கள் ஆதரிக்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது (ஆதரவு - 11.6 மட்டுமே). தற்போதைய ஆய்வில் இந்த ஆதரவு வெறும் 5.4 ஆகக் குறைந்துள்ளது. அரசுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வருவாய் இழப்பை ஏற்படுத்தும் இத் திட்டத்தைக் கைவிடவேண்டும் (52.7), இத் திட்டத்தின் பலன் பார்வையாளர்களைச் சென்றடையாமல் பட முதலாளிகளுக்கே சாதகமாக உள்ளது என்பதால் இதைக் கைவிட வேண்டும் (21.3), வெறும் தலைப்புக்காக இல்லாமல், *கருத்துள்ள படங்களுக்கு மட்டும் வரிவிலக்குத் தரலாம்* (17.1) ஆகியவை முக்கியக் கருத்துக்கள்.

***05. அரசு கேபிள் டி.வி. நிறுவனம்:***

அரசு கேபிள் டி.வி. நிறுவனம் தொடங்குவதில் தேவையற்ற சுணக்கம் ஏற்பட்டுள்ளதாகப் பெரும்பாலோர் (49.3) கருதுகின்றனர். சுணக்கம் எதுவுமில்லை, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு நிதானமாக எடுத்து வருகிறது (31.8), தொழில்நுட்பரீதியாகக் காலாவதியாகிவரும் கேபிள் தொழிலில் அரசு ஈடுபடுவது வீண்வேலை (16.2) ஆகியவை பிற முக்கியக் கருத்துக்கள்.

***06. இடையூறான விளம்பரம்:***

சாலைப் போக்குவரத்துக்கு அதிக இடையூறாக உள்ள வெளிப்புற விளம்பரங்கள் கட்சி அரசியல் தொடர்பானவை என்பது பெரும்பாலானோரின் (40.3) அனுபவமாக உள்ளது (பிறவற்றில் முக்கியமானவை: சினிமா தொடர்பானவை - 36.2, விற்பனை தொடர்பானவை - 20.2).

## ***இளைஞர் அரசியல்***

***07.*** கல்வி நிலையங்களில் எடுக்கப்பட்டு வரும் சில நடவடிக்கைகள் மற்றும் முன்வைக்கப்படும் சில பரிந்துரைகள் தொடர்பாக மக்கள் தெரிவித்த கருத்துக்களில் வயதுரீதியாகக் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் வெளிப்படுகின்றன.

| *நடவடிக்கை/பரிந்துரை* | *வரவேற்பு* | |
|---|---|---|
| | *வயது 35 வரை* | *35-க்கு மேல்* |
| பள்ளிகளில் செல்பேசிக்குத் தடை | 52.5 | 90.6 |
| **கல்லூரிகளில் ஆடைக் கட்டுப்பாடு** | **27.4** | **54.1** |
| நேரடி அரசியலில் கல்லூரி மாணவர்கள் | 79.8 | 49.2 |
| **நேரடி அரசியலில் பள்ளி மாணவர்கள்** | **17.6** | **9.3** |
| பள்ளிகளில் பாலியல் கல்வி | 86.9 | 45.5 |
| **தமிழ்வழி சமச்சீர் கல்வி** | **62.7** | **76.8** |

*(மீதி - நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு)*

***08. படித்தவர்கள் ஒதுங்குவதேன்?***

படித்து முடித்த இளைஞர்கள் பெரும்பாலும் அரசியலை விட்டு ஒதுங்கிவிட முக்கியக் காரணமாக மக்கள் குறிப்பிடுபவை: அரசியலில் பணமே பிரதானம், திறமைக்கு மதிப்பில்லை - 32.3, இங்கு வன்முறை அதிகம், உயிருக்குப் பாதுகாப்பில்லை - 20.6, அரசியலை விடப் பிற துறைகளில் அதிகம் சம்பாதிக்கலாம் - 17.0, எல்லாக் கட்சிகளிலும் முதியவர்களே ஆதிக்கம் செலுத்துகிறார்கள் - 14.2, குடும்ப/சாதி அரசியலை மீறி எந்தக் கட்சியுமில்லை - 4.1.

***09. படித்தவரா? கட்சிக்காரரா?***

நன்கு படித்தவர்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக (62.7) வெளிப்படுகிறது (வரக்கூடாது - 24.3, வருவதால் அரசியலில் பெரிய வித்தியாசம் ஏற்பட்டுவிடப் போவதில்லை - 10.3). ஆனால், தங்கள் கட்சி நிறுத்தும் வேட்பாளர் படிக்காதவராக இருந்து, போட்டி வேட்பாளர் படித்தவராக இருக்கும் சூழலில், படித்தவரை விடத் தங்கள் கட்சி வேட்பாளருக்கே வாக்களிக்கப் போவதாகப் பெரும்பாலோர் (67.9) தெரிவித்துள்ளனர்.

## ***தமிழக அரசியல்***

***10. திமுக அரசின் நலத் திட்டங்கள் - ஒட்டுமொத்த மதிப்பீடு:***

கடந்த ஒன்றரை ஆண்டுகளாகத் திமுக அரசு நடைமுறைப்படுத்தி வரும் பல்வேறு நலத் திட்டங்களையும் ஒட்டுமொத்த மதிப்பீடு செய்து, தங்கள் கருத்துக்களை மக்கள் தெரிவிக்கையில், இத் திட்டங்களின் நோக்கத்திற்குப் பலத்த ஆதரவும், அவற்றைச் செயல்படுத்தும் விதத்திற்குக் கணிசமான எதிர்ப்பும் பதிவாகியுள்ளது.

***பல்வேறு நலத்திட்டங்களின் நோக்கம்:***

| | |
|---|---|
| பாராட்டுக்குரியது | 75.3 |
| தொலைநோக்கு இல்லாதது | 24.7 |

***நலத்திட்டங்களின் செயல்பாடு:***

| | |
|---|---|
| திருப்தியாக உள்ளது | 51.5 |
| திருப்தியாக இல்லை | 48.5 |

***11. தனிப்பட்ட நலத்திட்டங்கள் குறித்த மதிப்பீடு:***

தனிப்பட்ட நலத்திட்டங்களைப் பொருத்த அளவில், மக்களின் மதிப்பீட்டில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காணமுடிகிறது.

| நலத்திட்டம் | பாராட்டுக்குரிய நோக்கம் | திருப்தியான அமுலாக்கம் |
|---|---|---|
| கிலோ ரூ.2க்கு ரேஷன் அரிசி | 90.1 | 42.6 |
| **நிலமற்றோருக்கு நிலம்** | **64.5** | **23.7** |
| இலவசத் தொலைக்காட்சி | 43.3 | 59.8 |
| **முதியோருக்குக் கருணைத் தொகை** | **82.4** | **47.3** |
| சத்துணவில் மூன்று முட்டைகள் | 92.7 | 80.5 |
| **இலவச கேஸ் அடுப்பு** | **72.6** | **49.9** |

பொதுவிநியோக முறை குறித்த நகர்ப்புற மக்களின் பார்வைக்கும் கிராமப்புற மக்களின் பார்வைக்கும் கணிசமான வேறுபாடுகள் உள்ளன. தரமற்ற அரிசி, குறைவான எடை, குறிப்பிட்ட நாளில் வாங்கத் தவறிவிட்டால் மற்றொரு நாளில் தர மறுப்பது, ஸ்டாக் இல்லை என்று சொல்லிவிட்டு அரிசி மற்றும் மண்ணெண்ணெயைக் கடத்துவது, அரிசி-எண்ணெயுடன் வேறு பொருட்களையும் வாங்க வற்புறுத்துவது போன்ற பல கசப்பான அனுபவங்களைப் பெரும்பாலான கிராம மக்கள் பகிர்ந்து கொண்டனர்.

***12. மதச் சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு:***

மத அடிப்படையில் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியருக்கும் 3.5 விழுக்காடு வீதம் திமுக அரசு இட ஒதுக்கீடு வழங்கியுள்ளதற்கு மூன்றில் இருவர் (66.3) வரவேற்புத் தெரிவிக்க, இப்படி மதரீதியாக உள்ஒதுக்கீடு தருவது தவறான முன்னுதாரணம் என மூன்றில் ஒருவர் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

***13. உடனடித் தேவை - மின்சாரம்:***

தங்கள் ஊரில்/பகுதியில் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய அவசரத் தேவை/ பிரச்சனையாக மிகப் பெரும்பான்மையான மக்கள் (82.7) சுட்டிக்காட்டுவது மின்வெட்டு. ஏனைய தேவைகளில் குறிப்பிடத்தகுந்தவை: குடிதண்ணீர் வசதி - 6.5, கழிப்பிட வசதி - 4.3, சாலை/பஸ் வசதி - 3.9, மருத்துவ/சுகாதார வசதி - 2.6.

***14. மக்கள் பிரதிநிதிகளின் செயல்பாடு:***

பல்வேறு மட்டங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் செயல்பாடுகளைப் பொருத்த வரை, நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்களை விட, உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பு வகிப்போருக்கு அதிகப் பாராட்டுக் கிடைக்கிறது.

| | *நன்று* | *சிறப்பாக ஏதுமில்லை* |
|---|---|---|
| நாடாளுமன்ற உறுப்பினர் | 44.6 | 12.1 |
| சட்டமன்ற உறுப்பினர் | 47.0 | 13.0 |
| நகராட்சி/பஞ்சாயத்துத் தலைவர் | 56.2 | 13.3 |
| வார்டு உறுப்பினர் | 59.3 | 13.6 |

*(மீதி - செயல்பாடு மோசம்)*

***15. அரசு அலுவலகங்களின் செயல்பாடு:***

திமுக ஆட்சியில் அரசு அலுவலகங்கள்/அதிகாரிகள் பெரும்பாலும் மிக நேர்மையாக, கடமை உணர்வோடு செயல்படுகிறார்கள் எனத் தெரிவிப்போர் - 22.4. ஏனையோர் (77.6) அரசு அதிகாரிகள் மீது வெவ்வேறு விதங்களில் அதிருப்தியை வெளிப்படுத்துகிறார்கள்:

லஞ்சம் வாங்காமல் எந்த வேலையும் நடப்பதில்லை - 57.7

அப்பாவி ஜனங்களைத் தேவையில்லாமல் இழுத்தடித்து அலைக்கழிக்கிறார்கள் - 10.7

பெரும்புள்ளிகள் சிபாரிசு இல்லாமல் எதுவும் நடப்பதில்லை - 5.6

ஆளும்/தோழமைக் கட்சிக்காரர்களுக்கு மட்டுமே காரியம் ஆகிறது - 3.5

***16. அரசு வேலைக்குத் தேர்ந்தெடுக்கும் விதம்:***

பல்வேறு அரசுத் துறைகளுக்கும் திமுக அரசு வேலைக்கு ஆள் எடுக்கும் விதம், ஒளிவு மறைவின்றி, திறமை/மூப்பு அடிப்படையில் அமைந்துள்ளதாகக் கருதுவோர் - 22.2. ஏனையோர் (77.8) இது குறித்துக் கசப்புணர்வை வெளிப்படுத்துகிறார்கள் (லஞ்சம் கொடுப்பவர்களுக்கே வேலை கிடைக்கிறது - 58.7, திமுக-வினருக்கு/அமைச்சர்கள் சிபாரிசு செய்பவர்களுக்கு மட்டுமே வேலை கிடைக்கிறது - 15.4).

***17. அரசியல் தலைவர்களுக்குச் சிலை?***

சாலைகளிலும் மற்ற பொதுவிடங்களிலும் அரசியல் தலைவர்களுக்குச் சிலை வைப்பது நல்லதுதான் என்போர் - 26.7. மற்றவர்கள் அனைவரும் (73.3) சிலைகள் வைப்பதைத் தவிர்ப்பதை விரும்புகின்றனர் (சாதி/மத/கட்சி மோதல்களுக்கு வழிவகுப்பதால் சிலைகளைத் தவிர்க்கவேண்டும் - 37.5, அரசியல் காரணங்களுக்காகவே சிலைகள் வைக்கப்படுவதால் இந்தப் பழக்கத்தைக் கைவிட்டுவிட வேண்டும் - 32.9).

***18. விலைவாசி உயர்வு:***

விலைவாசி உயர்வைத் தடுக்கத் திமுக அரசு தவறிவிட்டது என்பதே பெரும்பான்மைக் கருத்தாக (57.1) பதிவாகியுள்ளது. விலைவாசியைக் கட்டுப்படுத்துவது மாநில அரசின் கையில் இல்லை (24.1), தற்போது அப்படியொன்றும் விலைவாசி ஏறிவிடவில்லை (13.4) ஆகியவை பிற முக்கியக் கருத்துக்கள். கடந்த 2006 டிசம்பர் கணிப்பு முடிவுகளோடு ஒப்பிடுகையில், திமுக அரசை விமர்சிப்போர் எண்ணிக்கை தற்போது 11 விழுக்காடு அதிகரித்துள்ளது (2006 டிசம்பர் - 46.1).

***19. மது அருந்துவோர் எண்ணிக்கை:***

தமிழகத்தில் மது அருந்துவோர் எண்ணிக்கை பெருகிவரக் காரணங்களாக, இளைஞரிடையே பணப் புழக்கம் அதிகரித்திருப்பது (39.6), குறைந்த விலையில் ரேஷன் அரிசி கிடைப்பதால் ஆண்கள் சிறிதளவு சம்பளத்தையே வீட்டுச் செலவுக்குத் தருவது (38.0), பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் விளையும் விரக்தி (12.5), தமிழ்ப் பண்பாட்டில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் (9.3) ஆகியவை சுட்டிக்காட்டப்படுகின்றன.

***20. மதுவிலக்கு?***

மது அருந்துவோர் எண்ணிக்கை பெருகிவரும் சூழ்நிலையில், பூரண மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை மிக அழுத்தமாக (68.3) பதிவாகியுள்ளது. அளவோடு மது அருந்துவதில் தப்பில்லை (17.7), மதுக் கடைகளை மூடுவது கள்ளச் சாராயத்திற்கே வழிவகுக்கும் (12.3) ஆகியவை பிற முக்கியப் பதிவுகள்.

***21. டாடா தொழிற்சாலைக்கு அரசு ஆதரவு?***

சாத்தான்குளம் பகுதியில் டாடா டைடானியம் தொழிற்சாலை தொடங்க அரசு ஆதரவு தருவதற்குக் கணிசமான (67.9) எதிர்ப்பு வெளிப்படுகிறது. இந்த எதிர்ப்பின் தீவிரம் தேரிக் காட்டுப் பகுதியில் மிக அழுத்தமாகவே வெளிப்படுகிறது. குறிப்பாக, இத் திட்டத்தால் பாதிக்கப்படப் போவதாகக் கருதும் நிலச் சொந்தக்காரர்கள் மிகக் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள்.

தொழிற்சாலை வந்தால் வேலைவாய்ப்புப் பெருகும் (22.7) என்பது முக்கியமான மற்றொரு பதிலாக முன்வைக்கப்படுகிறது.

***22. சென்னையில் விதிமுறை மீறிய கட்டிடங்கள்:***

நீதிமன்றம் ஆணையிட்ட பின்பும் சென்னையிலுள்ள விதிமுறை மீறிய கட்டிடங்களை அப்புறப்படுத்த ஆவன செய்யாமல் அரசு மேல்முறையீடு செய்திருப்பது கண்டனத்துக்குரியது என்பது பெரும்பான்மை (79.3) கருத்தாக வெளிப்பட்டுள்ளது. பலகோடி முதலீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை இடிப்பதற்குப் பதிலாக அவற்றை வரைமுறை செய்வதே சரியானது (18.1) என்பது மற்றொரு சிறுபான்மைக் கருத்து.

***23. நதிநீர்ப் பங்கீடு:***

நதிநீர்ப் பங்கீட்டில் அண்டை மாநிலங்களுடன் எழுந்துள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணத் தமிழக அரசு எடுத்துவரும் முயற்சிகளை ஆதரித்தும் எதிர்த்தும் சம வலுவுடன் கருத்துக்கள் வெளிப்படுகின்றன (பாராட்டப்படவேண்டிய நிதானமான அணுகுமுறை - 35.3, அணுகுமுறையில் வேகமில்லை, போராட்டமே தீர்வு - 36.9). நதிநீர்ப் பங்கீட்டில் நிரந்தரத் தீர்வுகாண மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் (19.4) என்பது மற்றொரு முக்கியக் கருத்து.

***24. திமுக ஆட்சியும் எதிரணி அரசியலும்:***

தமிழகத்தில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்று, கடந்த ஒன்றரை வருடமாக ஆட்சி நடத்தியுள்ள விதத்தையும், திமுக-வின் தோழமைக் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகள் தமிழகத்தில் செயலாற்றியுள்ள விதத்தையும் குறித்த மக்களின் ஒட்டுமொத்த மதிப்பீடு:

| *ஒன்றரை வருடமாக...* | *நன்று* | *குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவுமில்லை* | *மோசம்* |
|---|---|---|---|
| ஆட்சியில் திமுக | 51.2 | 19.5 | 29.3 |
| தோழமைக் கட்சியாய் பாமக | 40.8 | 18.9 | 40.3 |
| தமிழக காங்கிரஸ் | 15.6 | 33.7 | 50.7 |
| இடதுசாரிகள் | 39.5 | 38.3 | 22.2 |
| விடுதலைச் சிறுத்தைகள் | 13.9 | 35.3 | 50.8 |
| எதிர்க்கட்சியாய் அதிமுக | 52.2 | 16.7 | 31.1 |
| மதிமுக | 39.3 | 34.2 | 26.5 |
| பாஜக | 12.9 | 32.3 | 55.8 |
| தேமுதிக | 48.5 | 37.1 | 14.4 |

கடந்த 2007 மே மாதக் கணிப்போடு ஒப்பிடுகையில், திமுக-வின் செயல்பாடுகளுக்கு ஆதரவு சற்றுச் சரிந்தும், அதிமுக-வின் ஆதரவு சற்று அதிகரித்தும் உள்ளது.

பாமக-வின் செயல்பாடுகளை ஆதரிப்போரும் எதிர்ப்போரும் சம பலத்தோடு இருப்பதும், காங்கிரஸ் மற்றும் பாஜக ஆகிய இரு முக்கியத் தேசியக் கட்சிகளும் மிகக் குறைந்த ஆதரவையே பெற்றிருப்பதும், இதற்கு மாறாக, தேமுதிக மிகக் குறைந்த அளவே விமர்சனத்திற்கு ஆளாகியிருப்பதும் இங்கு கவனிக்கத் தக்கவை.

***25. திமுக கூட்டணியில் விரிசலா?***

திமுக ஆட்சிக்கு வந்ததிலிருந்து இப்போது வரை அதன் கூட்டணி உறுதியாக உள்ளது என நான்கில் ஒரு பங்கினர் (26.4) கருதுகின்றனர். ஏனைய அனைவரும் (73.6) கூட்டணியில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவே கருதுகின்றனர் (விரிசல் ஏற்பட்டுள்ளது உண்மை, எனினும் கூட்டணிக்கு ஆபத்தில்லை - 30.5, தற்போதுள்ள விரிசல் இனி குறைய வாய்ப்பில்லை - 42.0).

***26. திமுக அரசின் நிலைதிறன்:***

இப்போதுள்ளபடியே திமுக அரசு *மீதமுள்ள மூன்றரை ஆண்டுகளும் நீடிக்கும்* எனப் பெரும்பாலோர் (71.4) கருதுகின்றனர் (இறுதிவரை சிறப்பாகச் செயல்படும் - 51.1, நீடித்தாலும் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது - 20.3). *கூட்டணிக் கட்சிகளையும் அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டால் தடுமாற்றமின்றிச் செயல்பட முடியும்* (18.5), தற்போதைய விரிசல் தீவிரமடைந்தால், நாடாளுமன்றத் தேர்தலோடு சேர்ந்து சட்டமன்றத்திற்கும் தேர்தல் வரலாம் (9.1) ஆகியவை சிறுபான்மைக் கருத்துக்கள்.

***27. தமிழகத்தில் மூன்றாவது அணி?***

தமிழகத்தில் திமுக, அதிமுக தவிர்த்த மூன்றாவது அணி உருவானால், அது எப்படி அமையும் என்பது குறித்த மக்களின் ஊகம்:

காங்கிரஸ்-தேமுதிக - 36.7

காங்கிரஸ்-தேமுதிக-பாமக-மதிமுக - 5.2

பாஜக-தேமுதிக - 12.6

பாஜக-தேமுதிக-பாமக-மதிமுக - 4.3

பலமான மூன்றாவது அணி அமையும் வாய்ப்பு தற்போது இல்லை - 35.5

***28. சிறந்த முதல்வர்:***

தமிழகத்தில் இதுவரை முதல்வர் பொறுப்பு வகித்துள்ளவர்களில், தாங்கள் அறிந்த வரை மிகச் சிறந்தவராக மக்கள் கருதும் முதல் ஐவர்: எம்.ஜி.ஆர். (40.8), காமராஜர் (25.9), கருணாநிதி (17.4), ஜெயலலிதா (7.6), அண்ணாதுரை (4.6).

***29. அடுத்த முதல்வர்:***

கருணாநிதிக்குப் பின் அடுத்த முதல்வராகும் வாய்ப்பு உடையவர்களாக மக்கள் கருதும் முதல் ஐவர்: ஜெயலலிதா (32.1), ஸ்டாலின் (27.9), விஜயகாந்த் (24.3), தயாநிதி மாறன் (6.2), ராமதாஸ் (5.7).

## *தேசிய அரசியல்*

***30. வங்கிக் கடன்:***

மத்திய அரசு அறிவித்துள்ள பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் லோன் வாங்க வங்கிகளுக்குச் சென்றால், மிகக் கசப்பான அனுபவமே காத்திருப்பதாகப் பெரும்பாலோர் (83.4) தெரிவிக்கின்றனர் (இல்லாத டாக்குமெண்டுகளைக் கேட்டு விரட்டியடிக்கிறார்கள் - 42.3, எல்லாம் சரியாக இருந்தாலும் லஞ்சத்தை எதிர்பார்த்து இழுத்தடிக்கிறார்கள் - 41.1). மிகச் சிலரே (7.6) எந்தச் சிக்கலும் இல்லாமல் லோன் வாங்கியுள்ளனர்.

***31. கிராமப்புற மருத்துவத் தொண்டு:***

மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கும் கட்டாயக் கிராமப்புற மருத்துவத் தொண்டுக்கு மக்களிடம் ஏகோபித்த வரவேற்பு வெளிப்படுகிறது (வரவேற்பு - 82.7, எதிர்ப்பு - 17.3). அதே வேளையில், மருத்துவ மாணவர்களின் போராட்டம் கையாளப்பட்ட விதம் குறித்துப் பரவலான அதிருப்தியும் வெளிப்படுகிறது (மாணவர்களை மனரீதியாகத் தயாரித்தபின் அறிவித்திருக்க வேண்டும் - 48.5, ஆய்வுக்குழு அறிக்கை வந்தபின் அதன் பரிந்துரைகளுக்கேற்ப திட்டத்தை அறிவித்திருக்க வேண்டும் - 32.6, தவிர்த்திருக்கக்கூடிய பிரச்சனை, தேவையற்ற அரசியலாக்கப்பட்டு விட்டது - 11.7, மாணவர்கள் உணர்ச்சிவசப்பட்டு விட்டார்கள் - 4.9).

***32. இலங்கைப் பிரச்சனை:***

இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்துத் *தமிழகக் கட்சிகளின்* அணுகுமுறையைப் பொருத்தவரை, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, *ஒருமித்த பார்வையை உருவாக்க வேண்டும்* (76.5), இந்தப் பிரச்சனையில் இந்தியா தலையிடுமாறு வற்புறுத்த வேண்டும் (21.8) ஆகிய பார்வைகள் அழுத்தம் பெறுகின்றன.

இலங்கைத் தமிழர் பிரச்சனையை மத்திய அரசு அணுகும் விதம் திருப்தியளிப்பதாக இல்லை என்ற எண்ணம் பரவலாக வெளிப்படுகிறது. இலங்கைத் தமிழரையும் விடுதலைப் புலிகளையும் பிரித்துப் பார்க்க மத்திய அரசு தவறுகிறது (65.2), தமிழருக்கு எதிரான சில முக்கிய அதிகாரிகளால் மத்திய அரசு தவறான பாதையில் செலுத்தப்படுகிறது (23.8), ஏற்கெனவே கமுக்கமாக இலங்கை அரசுக்கு இந்தியா உதவிவருகிறது (9.5) ஆகியவை முக்கியமான கருத்துக்கள்.

***33. சேது கால்வாய்த் திட்டம்:***

சேது கால்வாய்த் திட்டம் தமிழகத்திற்கு/நாட்டிற்குப் பயனுள்ளது என்பதால் அதை உடனே நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்து பெரும்பான்மையோரால் (72.4) வலியுறுத்தப்படுகிறது. இதனால் கடல்வளம் அழியும் ஆபத்துள்ளது (11.2), வணிகரீதியில் இத் திட்டம் வெற்றியடையாது (8.1), இந்தப்

பணத்தைக் கொண்டு கிராமப்புறச் சாலைகளை அமைக்கலாம் (6.9) ஆகியவை குறிப்பிடத்தக்க மாற்றுக் கருத்துக்கள்.

***34. விரைவில் நாடாளுமன்றத் தேர்தல்?***

நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே தேர்தல் வராது என்பதே பெரும்பாலோரின் அனுமானம் இடதுசாரிகள் உள்ளிட்ட பல கட்சிகளும் தேர்தலுக்குத் தயாராய் இல்லாததால் இப்போதைக்கு வாய்ப்பில்லை (53.8), குஜராத் தேர்தல் முடிவுகள் காங்கிரஸுக்குச் சாதகமாக இருப்பதைப் பொருத்தது (27.4), அமெரிக்காவுடனான அணுசக்தி உடன்பாடு குறித்த காங்கிரஸ்-இடதுசாரிகள் மோதல் எத்தகைய வடிவமெடுக்கும் என்பதைப் பொருத்தது (10.7) ஆகியவை முக்கிய அனுமானங்கள்.

***35. தேசிய அளவில் மூன்றாவது அணி?***

தேசிய அளவில் வலுவான மூன்றாவது அணி அமைவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளதாகக் கணிசமானோர் (34.1) கருதினாலும், அதற்கான வாய்ப்புகள் குறைவு என்பதும் அழுத்தமாகவே முன்வைக்கப்படுகிறது (29.3). மூன்றாவது அணி அமைந்தாலும் அவ்வணியால் ஆட்சியைப் பிடிக்க முடியாது (21.1), இப்போதைக்கு எதுவும் நிச்சயமாகச் சொல்ல முடியாது (15.5) ஆகியவை பிற பதில்கள்.

***36. உங்கள் வாக்கு?***

நாடாளுமன்றத்துக்கு இப்போது தேர்தல் வந்தால், தமிழகத்தைப் பொருத்தவரை காங்கிரஸ் தலைமையிலான அணிக்குப் பெரும்பான்மை ஆதரவு வெளிப்படுகிறது.

| | |
|---|---|
| காங்கிரஸ் தலைமையிலான அணி | 53.4 |
| பாஜக தலைமையிலான அணி | 19.3 |
| இடதுசாரிகள் பங்கேற்கும் மூன்றாவது அணி | 7.0 |
| இப்போதைக்கு நிச்சயமாகச் சொல்ல முடியாது | 20.3 |

***37. அடுத்த பிரதமர்:***

இந்தியாவின் அடுத்த பிரதமராகும் வாய்ப்புள்ளவர்களாக மக்கள் கருதும் முதல் ஐவர்: சோனியா காந்தி (37.8), வாஜ்பாய் (15.3), மன்மோகன் சிங் (13.7), ராகுல் காந்தி (10.6), அத்வானி (6.6).

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர்
20.12.2007

***குறிப்பு:***

01. மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன.

02. பெரும்பாலான கேள்விகளுக்கு மக்களின் முக்கியமான கருத்துக்கள் மட்டுமே இந்த ஆய்வறிக்கையில் இடம்பெற்றிருப்பதால், சதவீதத்தின் கூட்டுத்தொகை 100-ஆக இருக்காது.

**நன்றி**

ஆய்வின் பல்வேறு நிலைகளில் பங்கேற்ற அனைவருக்கும்

மக்கள் ஆய்வு
லொயோலா கல்லூரி, சென்னை 600 034